2013 அக்டோபர் 30]

65—

நிலத்தடி நீர் பாதுகாப்பு

***17654—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், பசியாபுரம் மற்றும் கீழடி பகுதிகளில் நிலத்தடி நீரைப் பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியத்திற்குட்பட்ட பசியாபுரம் மற்றும் கீழடி பகுதிகளில் நிலத்தடி நீர் மாசுபடுவதாக அந்தப் பகுதி கிராமப் பொதுமக்களிடமிருந்து எந்தவித புகார் மனுக்களும், வரப்பெறவில்லை. இருப்பினும், இப்பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டபோது நிலத்தடி நீரில் இயற்கையாகவே கடினத்தன்மை இருப்பதாகவும், ஆகவே, நிலத்தடி நீரைக் காய்ச்சி உபயோகப்படுத்துவதாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர். மேலும், ஆய்வில் இப்பகுதிகளில் சில உலர் செயல்முறை (Dry process) கொண்ட தொழிற்சாலைகள் அமைத்திருப்பதும் அவற்றால் நிலத்தடி நீர் மாசுபடவில்லை என்பதும் கண்டறியப்பட்டது. இருப்பினும், இத்தொழிற்சாலைகளை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

கடந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் இருண்ட தமிழகத்தை ஒளியேற்ற வாருங்கள் தாயே என்று ஏங்கிக்கொண்டிருந்த தமிழக மக்களுக்கு, இன்றைக்கு விலையில்லா அரிசி தந்து, கட்டணமில்லா கல்வி தந்து, 'அம்மா திட்டம்' தந்து, 'அம்மா குடிநீர்' தந்து, 'அம்மா உணவகம்' தந்து, ஏழை மக்கள் குடியிருக்க பசுமை வீடுகள் தந்து, விலையில்லா வீட்டு உபகரணங்கள் தந்து இன்று தமிழக மக்களை வாழ வைத்துக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு தாயே, தங்களை மீண்டும் ஒரு முறை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

என்னுடைய சிவகங்கை மாவட்டம், மானாமதுரை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருப்புவனம் தாலுகாவில் இருக்கின்ற பசியாபுரம், கீழடி, பூவந்தி ஆகிய பகுதிகளில் இருக்கின்ற அகர் கம்பெனி, சோப்பு கம்பெனி, வாஷர் கம்பெனி, மார்பிள் பாலிஷ் பட்டறைகள் போன்ற தொழிற்சாலைகளிலிருந்து வருகின்ற கழிவுநீரால் அந்தப் பகுதியில் இருக்கின்ற நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டு மக்கள் பயன்படுத்தும் குடிநீர் பயனற்றதாகவும், விவசாயம் செய்வதற்கு பயனற்ற வகையிலும் இருக்கின்றன. ஆகவே, இதுபோன்ற நிலையில் நிலத்தடி நீரைப் பாதுகாக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்புவனம் ஒன்றியத்திற்குட்பட்ட பசியாபுரம் மற்றும் கீழடி பகுதிகளில் பிளாஸ்டிக் பைப் தொழிற்சாலையும், ஒரு இரசாயனப் பொருள் சிலிகேட் தயாரிக்கும் தொழிற்சாலையும், ஒரு சிறிய இன்ஜினியரிங் தொழிற்சாலையும் மற்றும் கடல்பாசியிலிருந்து அகர் பொருட்கள், உணவுப் பொருட்கள்—food products தயாரிக்கும் இரண்டு தொழிற்சாலைகளும் அமைந்துள்ளன. இவற்றில் பிளாஸ்டிக் பைப் மற்றும் இன்ஜினியரிங் தொழிற்சாலைகளிலிருந்து எந்தவித செயல்முறைக் கழிவுநீரும் உருவாவது இல்லை. இரசாயனப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையின் செயல்முறையிலிருந்து உருவாகும் கழிவுநீர் சூரிய ஒளி வெப்பத்தின்மூலம் ஆவியாக்கப்படுகிறது.

முற்பகல் 10—50

எனவே, எந்தத் தொழிற்சாலைகளிலும் எந்தக் கழிவுநீரும் வெளியேற்றப்படுவதில்லை. கடல் பாசியிலிருந்து அகர் பொருட்கள், உணவுப் பொருட்கள்—Food products தயாரிக்கும் தொழிற்சாலைகள் தங்களது கழிவுநீரை முறையாகச் சுத்திகரித்து பாசனத்திற்கு தங்களின் சொந்த நிலத்துக்குப் பயன்படுத்துகின்றனர். கடல்பாசி தொழிற்சாலைகள் மூலப்பொருட்களின் இருப்பைப் பொறுத்து, வருடத்தில் நான்கு முதல் ஆறு மாத காலமே செயல்படுகின்றன. இங்கு அமைந்துள்ள எல்லா தொழிற்சாலைகளும், 24—10—2013 அன்று மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் ஆய்வு செய்யப்பட்டன. கடல்பாசி தொழிற்சாலைகள் தற்சமயம் இயக்கத்தில் இல்லை. மற்ற தொழிற்சாலைகளிலிருந்து கழிவுநீர் எதுவும் வெளியேற்றப்படாததும் கண்டறியப்பட்டுள்ளது. மாசுக் கட்டுப்பாடு வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பசியாபுரம், கீழடி, பூவந்தி ஆகிய பகுதிகளில், நிலத்தடி நீர் பாதிக்கப்படுகின்றபோது அந்தப் பகுதிகளில் உள்ள மக்கள் அந்தத் தண்ணீரைக் குடிப்பதற்கு கஷ்டப்படுகிறார்கள். விவசாயத்திற்குப் பயன்படுத்துவதற்கும் அது பயனில்லாமல் இருக்கின்றது. மேலும், அந்தப் பகுதியில் அந்தத் தண்ணீரை வைத்து வீடுகள் கட்டுகின்ற நேரத்தில், அந்த வீட்டினுடைய சுவர்கள் சில நேரத்தில் பெயர்ந்து விழக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அதேபோல், அந்தப் பகுதியில் சில நோய்களும் வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. சில நேரங்களில் Kidney failure மற்றும் மகப்பேறின்மை போன்ற நோய்கள் வரக்கூடிய ஒரு சூழ்நிலை இருப்பதாக அந்தப் பகுதி மக்கள் கூறி வருகின்றார்கள். ஆகவே, இதுபோன்ற நிகழ்வுகள் நடைபெறாமல் இருக்க, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் இன்றைக்குத் தமிழகத்தை முதன்மை மாநிலமாக அறிவித்துக் கொண்டிருக்கிற நேரத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு நிலத்தடி நீரைப் பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படுகின்ற கழிவுநீரினால் எந்த மாசும் ஏற்படுத்தப்படவில்லை. அந்தக் கழிவுநீர் மொத்தமாக ஆவியாக்கப்படுகின்றது. மேலும், அந்தப் பகுதியின் பொதுமக்கள் நிலத்தடி நீரில் ஏற்கெனவே கடினத்தன்மை இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். நீரைக் காய்ச்சிதான் உபயோகித்திருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிடுகின்றேன். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, மீண்டும் ஒரு முறை மாசுக் கட்டுப்பாடு வாரியத்தினுடைய* Engineer*-களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணை பெற்று, தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்து அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 66, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

66—

தடுப்புச் சுவர்

***36260**—**திரு. மு.வீ. கருப்பையா:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதி, சாத்தையாறு அணை முதல் செல்லூர் கண்மாய் வரை உள்ள சாத்தையாறு ஓடையில் தடுப்புச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சோழவந்தான் தொகுதி, சாத்தையாறு முதல் செல்லூர் கண்மாய் வரை உள்ள ஓடையிலே தடுப்புச் சுவர் அமைக்கும் பணி நடைபெறுமா என்ற கேள்வியை